Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.532/2019

**Depositions of PW- 5**

| | | | |
|---|---|---|---|
| Name | திரு.சக்திவேல் | Occupation | விற்பனையாளர் |
| Father's name | ஆண்டி | Calling | |
| Village | பெருமாள்பட்டி | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 23rd day of July 2026.

23.07.2026

3, 4, 6 மற்றும் 7 ம் எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்போது பெருமாள்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் டாஸ்மாக்கில் விற்பனையாளராக வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் ஆவணத்திலுள்ள முதலாவது கையெழுத்து என்னுடையதுதான். கடந்த 01.07.2013 அன்று மாலை 04.45 மணியளவில் 11864 சின்ன கடை பஜாரிலுள்ள டாஸ்மாக் கடை அருகே போலீசார் படம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்ததில் நானும் அழகர் என்பவரும் சாட்சிகளாக கையெழுத்து செய்தோம். **பார்வை மகஜர் அசாஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**

மேற்படி பார்வை மகஜரில் நான் சம்பவயிடத்தில் வைத்து கையெழுத்து செய்யவில்லை என்றாலும் காவல்நிலையத்தில் வைத்துதான் கையெழுத்து செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க தற்போது பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.

Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.532/2019

**Depositions of PW- 6**

| | | | |
|---|---|---|---|
| Name | திரு.பவுன்ராஜ் | Occupation | கணக்காளர் |
| Father's name | ஜெயராஜ் | Calling | |
| Village | மாங்குடி | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 23rd day of July 2026.

23.07.2026

3, 4, 6 மற்றும் 7 ம் எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்போது மாங்குடியில் குடியிருந்து வருகிறேன். நான் தனியார் நிறுவனத்தில் கணக்காளராக வேலை செய்து வருகிறேன். கடந்த 2013 ம் வருடம் அசோக்குமார் என்பவரிடம் Audit Assistant ஆக வேலை செய்தேன். செல்வக்குமார் என்பவர் என்னுடன் Audit Assistant ஆக வேலை செய்தார். அவர் திருவில்லிபுத்தூரிலுள்ள டவுணில் உள்ள டாஸ்மாக் கடைகளில் Auditing செய்தார். கடந்த 27.06.2013 அன்று 11.30 மணியளவில் செல்வக்குமார் 11864 டாஸ்மாக்கடையில் Auditing பார்த்தபோது நானும் உடன் இருந்தேன். என்னை டாஸ்மாக் கடையில் அடுக்கி வைத்திருக்கும் பாக்ஸ்களை எண்ணி எழுதிக்கொடுக்க சொன்னார்கள். அதுசம்மந்தமான Auditing வேலைகளை செல்வக்குமார் மற்றும் அர்ஜூன் ஆகியோர் தான் செய்தார்கள். சரக்கு இருப்பில் குறைபாடு இருந்ததாக சொன்னார்கள். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை—**

மேற்படி சரக்கு குறைபாடு இருந்ததா என்பது பற்றி நேரடியாக எனக்கு தெரியாது என்றால் சரிதான். மேற்படி செல்வக்குமார் Auditing செய்ததாகவும் நான் அவருக்கு துணையாக உடன் சென்றதாகவும் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.